செ.வெ.எண்.106/2018 நாள்: 13.03.2018

# பத்திரிக்கைச் செய்தி

காஞ்சிபுரம் மாவட்டஆட்சித்தலைவர், திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுவோர் தாங்கள் ஓய்வூதியம் பெறும் மாவட்டக் கருவூலம் மற்றும் சார் கருவூலங்களில் இந்த ஆண்டு ஏப்ரல் 2018ம் மாதத்திலிருந்து ஜூன் 2018ம் மாதத்திற்குள் நேர்காணல் செய்து கொள்ள வேலைநாட்களில் மாவட்டக் கருவூலம் மற்றும் சார் கருவூல அலுவலகத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தமிழ்நாடு அரசில் பணியாற்றி ஓய்வுபெற்று மாவட்டக் கருவூலம் மற்றும் சார் கருவூலம் மூலமாக ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெற்று வருபவர்கள் 01.04.2018 முதல் 30.06.2018 வரை அலுவலக பணிநாட்களில் நேர்காணல் செய்துகொள்ள வரும்போது கீழ்க்காணும் ஆவணங்களை கொண்டுவருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

## I. நேரில் வருபவர்கள

1. ஆதார் அட்டை (கட்டாயமாகஅளிக்கவேண்டும்)
2. ஓய்வூதியப் புத்தகம் (Pension Payment Order)
3. நடைமுறையிலுள்ள சேமிப்புக் கணக்கு வங்கிபற்று வரவு புத்தகஎண் (Core Banking Account No.)
4. வருமானவரிகணக்குஎண் (PAN Account No.)
5. குடும்ப அடையாள அட்டை (Ration Card) ஆகியவற்றின நகல்களுடன் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் மேற்குறிப்பிட்ட 5 ஆவணங்களுடன் மறுமணம் புரியா சான்றுடனும் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## II. நேரில் வர இயலாதஓய்வூதியர்கள்

### (1) JeevanPramaan Portal மூலம் Digital Life Certificateவழங்குதல்

கருவூல அலுவலகங்களுக்கு நேர்காணல் வரமுடியாத ஓய்வூதியதாரர்கள் ஜீவன் ப்ரமான் போர்டல் திட்டத்தின்கீழ் நேர்காணல் செய்திடலாம். இச்சேவை e-Seva மையங்களில் வழங்கப்படுகிறது. எனவே e-Seva மையங்களில் Digital Life Certificate பெறுவதன் மூலம் நேர்காணல் செய்திடலாம். இதற்கு ஓய்வூதியர் தனது ஓய்வூதிய கொடுவை எண், வங்கி கணக்கு எண், ஆதார் எண், கைப்பேசி எண் ஆகிய விவரங்களை e-Seva மையத்தில் தெரிவித்தால் அவர்களுக்கு மின்னனு வாழ்வு சான்றிதழ் அச்சிட்டு வழங்கப்படும்.

### (2) வாழ்வு சான்று அளித்தல்

நேரில் வர இயலாத ஓய்வூதியர்கள் வாழ்வு சான்று உரிய படிவத்தில் மேற்குறிப்பிட்ட 5 ஆவணங்களின் நகல்களுடன் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். வாழ்வு சான்றினை கீழ்க்காணும் அலுவலரின் கையொப்பம் பெற்று அனுப்பிட வேண்டும்.

- ஓய்வூதிய வங்கிக் கணக்கு உள்ள கிளைமேலாளர் (அல்லது)
- அரசிதழ் பதிவு பெற்ற மாநில மற்றும் மத்திய அரசுஅலுவலர் (மற்றும்)

- ❖ வட்டாட்சியர் / துணை வட்டாட்சியர் அல்லது வருவாய் ஆய்வாளர் ஆகியோரிடம் சான்றொப்பம் பெற்று அனுப்ப வேண்டும். நேரில் வர இயலாத குடும்ப ஓய்வூதியர்கள் மேற்குறிப்பிட்ட 5 ஆவணங்களுடன் (வ.எண். 1 முதல் 5 வரை) மறுமணம் புரியாசான்றும் அளிக்க வேண்டும். (அல்லது)

## III. வெளிநாட்டில் வசிக்கும் ஓய்வூதியர்கள்

வெளிநாட்டிலுள்ள மாஜிஸ்திரேட், நோட்டரி, வங்கிமேலாளர் அல்லது இந்திய தூதரக அலுவலரிடம் வாழ்வுச் சான்று (Life Certificate) பெற்று சம்பந்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும். அல்லது Jeevan Pramaan Portal மூலம் Digital Life Certificate வழங்கிடலாம்.

## IV. மற்றவிபரங்கள்

ஓய்வூதியர்கள் தற்போதைய இருப்பிடமுகவரி, கைபேசிஎண், மின்னஞ்சல் முகவரி (இருப்பின்) ஆகிய விபரங்களையும் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## V. ஓய்வூதியம் நிறுத்தம்

ஓய்வூதியர்கள் ஏப்ரல் மாதம் 2018 முதல் ஜூன் மாதம் 2018 வரை நேர்காணலுக்கு வரத் தவறினாலோ அல்லது சான்றொப்பம் செய்யப்பட்ட வாழ்வுச் சான்றினை அனுப்பத் தவறினாலோ ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியம் ஆகஸ்டு மாதம் 2018 முதல் நிறுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## VI. இணையதளமுகவரி

சான்றுகளுக்கான மாதிரிப் படிவத்தை www.tn.gov.in/karuvoolam என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், அலுவலக தொலைபேசி எண் 044/27238321-ல் தொடர்பு கொள்ளலாம்.

ஜீவன் பிரமான் இணைய தளமுகவரி www.jeevanpramaanportal.gov.in.

## VII. ஓய்வூதியர் அடையாளஅட்டை

ஓய்வூதியருக்கான அடையாள அட்டை வழங்குவதற்கான படிவத்தைப் பூர்ததி செய்து இதுநாள வரை வழங்காத ஓய்வூதியர்கள் நேர்காணலுக்கு வரும்போது அப்படிவத்தினைக் கருவூலத்தில் பெற்று பூர்த்தி செய்து, அப்படிவத்துடன் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தினை இணைத்து வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## குறிப்பு

பொதுத்துறை வங்கிகளின் (PSB Scheme) மூலம் ஓய்வூதியம / குடும்பஓய்வூதியம் பெறுபவர்கள் தமிழ்நாடு மின்வாரியம், ரயில்வே, அஞ்சல்துறை, தொழிலாளர் வைப்பு நிதித்திட்டம் மத்திய அரசு ஓய்வூதியர்கள், உள்ளாட்சி மன்ற ஓய்வூதியர்களுக்கு இந்த அறிவிப்புப் பொருந்தாது என்று அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்திவெளியிடுபவர்,
செய்திமக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.